**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 524** **நாள்: 29.09.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சி, மின்சாரத் துறை உள்ளிட்ட சேவைத் துறைகள் ஒருங்கிணைந்து பணிகள் மேற்கொள்வது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் தமிழ்நாடு மின் வாரிய நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.வி.அருண்ராய், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று நடைபெற்றது.**

இன்று (29.09.2026) தமிழ்நாடு மின் வாரிய நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.வி.அருண்ராய், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் மாநகராட்சி, மின்சாரத் துறை உள்ளிட்ட சேவைத் துறைகள் ஒருங்கிணைந்து பணிகள் மேற்கொள்வது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் அண்ணா சாலையில் உள்ள மின் வாரிய அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, மின் இணைப்புப் பெட்டிகளை உயர்த்தி வைத்தல், வெளியில் தெரியும் மின் கேபிள்களை நிலத்தில் பதித்தல், சாலை வெட்டுகள் மேற்கொள்ளப்படும் இடங்களில் சேவைத்துறைகள் ஒருங்கிணைந்து செயல்படுதல், ஒருங்கிணைப்புப் பணிக்காக ஒவ்வொரு துறையிலும் ஒரு ஒருங்கிணைப்பு அலுவலரை நியமித்து பணிகள் வேகமாக நடைபெறுகின்ற வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், வாட்ஸ் அப் குரூப்பி அனைத்துத் துறை அலுவலர்களையும் சேர்த்து தகவல் பரிமாற்றம் மற்றும் சேவையினை மேம்படுத்துதல், பணிகள் நடைபெறும் இடங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், காவல் துறையுடன் ஒருங்கிணைப்பு உள்ளிட்ட அனைத்து பணிகளையும் ஒருங்கிணைந்து மேற்கொள்வது தொடர்பாக ஆலோசித்து அறிவுரைகள் வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மின் துறையின் இணை மேலாண்மை இயக்குநர் திரு.எஸ்.பாலச்சந்தர், இ.ஆ.ப., காணொலிக் காட்சியின் வாயிலாக வட்டார துணை ஆணையர்கள் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., (வடக்கு), திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., (மத்தியம்), திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., (தெற்கு) மற்றும் மாநகராட்சி, மின் துறை, சென்னை குடிநீ வாரியம், டோரண்ட் கேஸ் நிறுவனம், பி.எஸ்.என்.எல்., காவல் துறை உள்ளிட்ட சேவைத் துறைகளின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**